بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON / வெள்ளிக்கிழமை குத்து:பா 12/02/2016

**(02 JAMADUL AWWAL 1437 HIJRI)**

# "MAKE GOD ALMIGHTY YOUR ULTIMATE GOAL"

## "இறைவன் உங்களின் பரம இலட்சியமாகட்டும்"



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்தியபிறகு தஷ்ஹுதும் தஅவுசும் அல்: பாத்திஹவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ)** அவர்கள் இவ்வாறு கூறினார்.

சிறுப்பார்வையுடையோர்களும் ஞானமற்றோர்களுமான மனிதர்கள், அவர்களின் வாழ்க்கையினை பலதரத்தில் விளக்கி கொள்வதும், பொளதீகமான உலகின் இலட்சியத்துடனும் ஆசைகளுடனும் அதனை மிதப்படுத்திக்காட்டவும் செய்கின்றனர். ஆனால் எல்லாம் வல்ல இறைவன் தனது தூய வசனங்கள் மூலமாக மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை குறித்து தீர்மானித்துள்ளான்.

**"என்னை வணங்கிகொள்வதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் படைக்கவில்லை"** (51-57) பூமியில் மனிதன் நிலைநிற்பதன் முக்கியமான நோக்கம் என்ன என்பதைக் குறித்து இறைவனே மனிதனுக்கு புரியவைக்கின்றான். உண்மையான இலட்சியம் அதாவது மனிதன் பரிபூரணமாக இறைவனுக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்பதாகும். மனிதன் தனது வாழ்க்கைக்கு சுயமாக ஒரு இலட்சியத்தை உருவாக்கிட முடியாது. காரணம் மனிதன் இவ்வுலகில் தோன்றியதும் இவ்வுலகை விட்டு செல்வதும் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறல்ல. மனிதன் ஒரு உயிரினம் மட்டுமாகும். மனிதனை ஒருவன் படைத்ததேயாகும்

அவனுக்கு மாபெரும் திறமைகள் வழங்கப்பட்டிருக்கின்றது. அதைப்போன்றே அவனுடைய வாழ்கைக்கு ஒரு நோக்கமும் உள்ளன. இதை நாம் உணர்ந்தாலும் சரி உணராமல் இருந்தாலும் சரி மனிதனை படைத்திருப்பதன் நோக்கம் இறைவனை மட்டும் வணங்கிக் கொள்வதற்கும் அதைபோன்றே அவனை புரிந்து கொள்வதற்கும் பரிபூரணமான பக்தி பிரகடனப்படுத்திக் கொள்வதற்கும் ஆகும். இதுவே உண்மை. திருகுர்ஆனில் மற்றொரிடத்தில் எல்லாம் வல்ல அல்லாஹு கூறியிருக்கின்றான்.

**"நிச்சயமாக தீனுல் இஸ்லாம்தான் அல்லாவிடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட மார்க்கமாகும்"** (3-20)

**"ஆகவே நீர் உம் முகத்தை தூய இஸ்லாமிய மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலை நிறுத்துவீராக! எந்த மார்க்கதில் அல்லாஹு மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய இயற்கை மார்க்கமாகும். அல்லாஹுவின் படைத்தலில் மாற்றம் இல்லை. அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் இதை அறிய மாட்டார்கள்"** (30-31)

இறைவனைப்பற்றி முழுமையாக உணர்ந்துக்கொள்ள வேண்டும் என மார்க்கம் நம்மை கற்பிக்கின்றது. இறைவனை முழமையாக வணங்கிக்கொள்ள வேண்டிய முறையும் இஸ்லாம் நமக்கு கற்பிக்கின்றது. இஸ்லாம் மனிதனின் இயல்பாகும்; இயற்கையாகும். மனிதனை படைத்திருப்பது இஸ்லாமிற்கு ஏற்றவாறாகும். அதாவது ஏகனாகிய இறைவனுக்காக அற்பித்தல் அதுவே நிரந்தரமும் உண்மையுமான நம்பிக்கை. இறைவன் நாடுவது மனிதன் பரிபூரணமாக தன்னிடத்தில் பண்புடன் இருக்க வேண்டும் என்றாகும். மனிதனின் அனைத்து ஆற்றல்களும் வினியோகித்து அவனை நேசிக்கவும் அவனுக்கு கட்டுபட்டு கொள்ளவும் வேண்டும். இஸ்லாமை கைவசபடுத்திக் கொள்வதற்கு தேவையான அனைத்து ஆற்றல்களும் இறைவன் மனிதனுக்கு வழங்கியருளியிருப்பதும் அதற்கேயாகும். அதாவது அவனுக்காக அனைத்தும் அர்பித்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமே மனித படைப்பின் உண்மையான நோக்கம் மனிதனின் வாழ்க்கையில் பல்வேறு விஷயங்களும் நிகழ்ச்சிகளும் இருப்பினும் மனிதனுக்கு உண்மையான மகிழ்ச்சி எல்லாம் வல்ல இறைவனில் இருந்து மட்டுமே கைவருவது. மிக ஏராளமான செல்வங்களை சேர்த்த பிறகு, மிக உன்னதமான பதவிகளில் அமர்ந்த பிறகு, ஒரு பெரிய வியாபாரியாக பரிணமித்த பிறகு, ஒரு பெரிய நாட்டை ஆண்டபிறகு ஒரு பெரிய தத்துவ மேதையாக அங்கீகாரம் பெற்றபிறகு, முடிவில் அவை அனைத்தையும் வேதனையுடன் தூக்கி வீசுகின்றான். அவனது இதயம் இவ்வுலக விஷயங்களால் மட்டும் நிறைந்திருந்தது. அவனது மனது ஒருபொழுதும் அவனது தந்திரமும் பொய்மையும் நிறைந்த இவ்வுலக செயல்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது ஒரு உண்மையாகும்.

ஒரு அறிவாளிக்கு இவ்விஷயம் திடீரென புரிந்துக்கொள்ளும். நமது ஆற்றலுக்கு அப்பாலுள்ள ஒரு பெரிய இலட்சியத்தின்பால் செல்ல நமக்கு இயலாது. உதாரணமாக கூறினால் ஒரு காளையின் மிக பெரிய வேலை நிலம் உழுவதும் தண்ணீரும் மற்றும் பொருட்களும் சுமந்து செல்வதும் போன்றவையாகும். இவையைக்கூடாமல் அதற்கு வேறொன்றும் செய்ய முடியாது. ஒரு காளையின் வாழ்கையின் இலட்சியம் இவையில் சுருங்குகின்றன. இதற்கு மேலாக

மற்றெதுவுமில்லை. ஆனால் மனிதனின் திறமையைக் குறித்து ஆய்வு செய்தால், அதற்கு ஒரு எல்கையினைக் கண்டு கொள்ள முயர்சித்தால் எல்லாம் வல்ல இறைவனை தேடிக்கொள்ளும் திறமையில் அது சென்றடைகின்றது. மனிதனின் திறமைகளில் எல்கை என்பது எல்லாம் வல்ல இறைவனை சந்தித்து கொள்தல் ஆகும். அவனது வாழ்கையின் உண்மையான இலட்சியம் அவனது இதயத்தின் கதவை இறைவனுக்காக திறந்து வைக்க வேண்டும் என்பதாகும்.

இந்த இலட்சியத்தை எவ்வாறு அடைய முடியும் என்பது ஒரு கேள்வியாகும். எவ்வழி மூலமாக இறைவனை சந்தித்துக்கொள்ளலாம்? அதற்கான முதல் படியே தவறிக்கொண்டால் உதாரணமாக ஒரு பறவையை அல்லது ஒரு விலங்கினை அதுமல்லது ஒரு மனித குழந்தையை இறைவனாக எண்ணினால் உண்மையான இறைவனை கண்டுகொள்வதற்க்கான நேர் வழியினை நாம் இழக்கின்றோம். உண்மையான இறைவன் அவனை தேடிக்கொள்வோர்களுக்கு உதவி புரிகின்றான். ஆனால் மரணிக்கக்கூடிய இறைவனுக்கு எப்படி மரணிக்கின்றோர்களுக்கு உதவியளிக்க முடியும்? என்றாவது, யாருக்காவது அப்படி உதவி கிடைத்திருக்கிறதா? இந்த குறிப்பான சூழ்நிலையில் மகத்துவமுடையவனான இறைவன் மிக அழகான விளக்கம் வழங்குவதை பாருங்கள்

**“உண்மையான அழைப்பு அவனுக்கே உரியதாகும். எவர் அவனையன்றி மற்றவர்களை அழைக்கின்றார்களோ அவர்கள் இவர்களுக்கு எவ்வித பதிலும் தர மாட்டார்கள். தண்ணீர் தன் வாய்க்கு தானாக வந்தடையவேண்டுமென்று, தன் இரு கைகளையும் விரித்து ஏந்திக்கொண்டு இருப்பவர்களைப்போல் இருக்கிறது. அது வாயை அடைத்து விடாது. இன்னும் கா.ஃபிர்களின் பிரார்த்தனை வழிகோட்டில் இருப்பதே தவிர வேறில்லை”** (13-15)

எல்லாம் வல்ல இறைவனின் முழுமையான வனப்பைக் குறித்துள்ள உணர்வாகும் இரண்டாவது படி. நம்இதயம் இயற்கை பரமாக அழகினை ஈர்த்துக்கொள்வதாகும். இறைவனின் அழகு அவன் ஏகன் என்பதிலாகும், அவனது அருள்களிலாகும், அவனது வல்லமையிலாகும், அவனது மற்று சிறப்பு தன்மைகளிலாகும். திரு குர்ஆன் விளக்குகின்றது.

**“நீர் கூறுவீராக: அல்லாஹு அவன் ஒருவனே. அல்லாஹு தேவையற்றவன். அவன் பெறவுமில்லை. பெறப்படவுமில்லை அன்றியும் அவனுக்கு நிகராக எவரும் இல்லை”** (112-2-5)

திரு குர் ஆன் இறைவனின் மகத்துவத்தைக்குறித்து மேலும் மேலும் நம்மை உணரச் செய்கின்றது. அவ்வகையான ஒரு இறைவனுக்கு மட்டுமே நமது இதயவிருப்பங்களின் இலட்சியமாகா நிலை நிற்க முடியுமென அது நமக்கு விழிப்புணர்வு வழங்கின்றது. அவையல்லாமல் உயிரிழந்ததும் ஆற்றலிழந்தவையுமாக இருக்கக் கூடாது.

இறைவனிடம் மிக நெருக்கமான உறவை வைத்துக்கொள்வதற்கான மூன்றாவதுபடி என்பது அவனது அருள்களைக் குறித்த அறிவாகும். இறை அருள்களின் தன்மையை பற்றி சூரா-அல் பாத்திஹாவில் கூறியிருப்பதை பாருங்கள்.

**“அனைத்துப் புகழும் அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்து பரிபக்குவப்படுத்தும் அல்லாஹுவிற்கே ஆகும். அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். தீர்ப்பு நாளின் அதிபதியும் ஆவான்”** (1-2,4)

ஒன்றும் இல்லாத நிலையிலிருந்து இறைவன் தனது அடியார்களை படைக்கின்றான். தனது தூய்மையான அருள்களிலிருந்து அவன் அவர்களுக்கு எப்போதும்

வழங்கிக்கொண்டிரிக்கின்றான். அனைத்தும் நிலைநிற்பதும் அவன் மூலமாகும். அவனது அருள்களுக்கு ஒரு எல்கையில்லை. திரு குர்-ஆன் கூறுகின்றது.

**"அல்லாஹுவின் அருட்கொடைகளை நீங்கள் கணிப்பீர்களாயின் அவற்றை நீங்கள் எண்ணி முடியாது"** (14:35)

படைப்பின் உண்மையான இலட்சியத்தை அடைவதற்கான நான்காவது படி என்பது இறைவணக்கம் ஆகும். அல்லாஹு கூறுகின்றான்.

**"உங்கள் இறைவன் கூறுகின்றான் என்னை நீங்கள் பிரார்த்தியுங்கள் நான் உங்களுக்கு பதிலளிக்கின்றேன். எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் பெருமையடித்துக் கொண்டிருக்கின்றார்களோ அவர்கள் வறுமையடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள்"** (40-61)

என்னிடம் மன்றாடுங்கள் உங்களுக்கு நான் பதிலளிப்பேன். எல்லாம் வல்ல இறைவனை அடைய நீங்கள் எளிமையுடன் நிரந்தரம் பிரார்த்தனை செய்துகொண்டிருங்கள். அப் பிரார்த்தனை நம் திறமை மூலமாகயல்ல மாறாக அல்லாஹுவின் ஆற்றல்கள் மீதான நம்பிக்கையில் ஆகவேண்டும்

இறைவனை சந்தித்துக் கொள்வதற்கான ஐந்தாவது படி என்பது இறைவழியிலான நிரந்தரமான முயர்சிகள் ஆகும்.

நாம் நமது செல்வங்களை இறைவழியில் செலவு செய்ய வேண்டும். பின்னர் அவனை தேடிக்கொள்ள முயர்சியுங்கள். அவனது வழியில் நமது எல்லா ஆற்றல்களையும் அர்பணம் செய்ய வேண்டும். நாம் நமது புத்தியும் அவனது வழியில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவன் கூறியது போன்று

**"உங்கள் பொருட்களையும் உயிர்களையும் கொண்டு அல்லாஹுவின் பாதையில் அறப்போர் புரியுங்கள்"** (2-4)

ஆகவே அவனது வழியில் உங்கள் செல்வம் கொண்டும், உங்கள் உயிர் கொண்டும், உங்கள் திறமைகள் கொண்டும், உங்களுக்கு வழங்கியிருக்கும் அறிவு கொண்டும் ஆற்றல்கள் கொண்டும் நிரந்திரமான முயற்சிகள் செய்யுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இறை அன்பும் மறுமையும் ஆக வேண்டும் உங்களின் அடிப்படை நோக்கம். மாறாக, இவ்வுலகின் தற்காலிகமான ஈர்ப்புகளிலாகக்கூடாது. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Issued by**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd.No.A/693)**

**Web. www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**